பிரிப்பதால், நிறைய பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள். அதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்கெங்கு உலர்களங்கள் தேவைப்படுகின்றனவோ, அங்கெல்லாம் விவசாயிகளுக்கு அமைத்துக் கொடுக்க ஆணையிட்டிருக்கிறார்கள். அதன்பொருட்டு, இந்த 4 வருடங்களில் 366 உலர்களங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த இடங்களில் தேவையிருப்பின் ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருப்பின் நிச்சயமாக, உலர்களங்கள் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 243, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

243—

சுற்றுச் சாலை

***50566 திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஊராட்சி, ஈயகுணத்திலிருந்து கொடுகன்குப்பம் வரை சுற்றுச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஊராட்சி, ஈயகுணம் வழியாகக் கொடுகன்குப்பம் வரை சுற்று வட்டச் சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது

இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் என்பது பிரசித்தி பெற்ற அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில் அமைந்திருக்கக்கூடிய ஊராட்சி. மாதந்தோறும் அமாவாசை தினத்தன்று இலட்சக்கணக்கான பக்தர்கள் அங்கு வந்து செல்கிறார்கள். அந்த ஊராட்சிக்கு வருவதற்கு கிட்டத்தட்ட 5 வழிகளில் பாதைகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு, திண்டிவனம்-கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து ஒரு சாலை அந்த ஊராட்சிக்கு வருகின்றது. அதன்வழியாக வாகனங்கள் அதிகமாக வருகின்றன. அவலூர்பேட்டை-திருவண்ணாமலை வழியாகவும் அந்த ஊராட்சிக்கு ஒரு சாலை வருகின்றது. அதன்வழியாகவும் வாகனங்கள் அதிகமாக வருகின்றன.*

அடுத்தபடியாக, கொடுகன்குப்பம் வழியாகச் சேத்துப்பட்டு செல்கின்ற சாலை; இன்னொரு சாலை வளத்தி வழியாக செல்கின்ற சாலை. அந்த ஊராட்சியில் விழாக் காலங்களில் கூட்ட நெரிசல் அதிகமாக ஏற்படுகின்றது. பேருந்து நிலையம் அங்கு சரியாக இல்லாத காரணத்தால், பேருந்துகள் எல்லாம் ஊராட்சிக்குள் வரக்கூடிய சூழ்நிலையில், அனைத்து வாகனங்களும் வருவதாலும், நடந்து செல்கின்ற பக்தர்களாலும் கூட்ட நெரிசல் ஏற்படுகிறது. கடந்த ஆண்டு அங்கு ஓர் உயிரிழப்புக்கூட ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதனைத் தடுக்கின்ற வகையில், சிறுதலைப்பூண்டி-கொடுகன்குப்பம் வழியாக, தாயனூர்-மாம்பட்டு வழியாக ஈயகுணத்தை இணைப்பதற்கு மேல்மலையனூர் ஏரியை ஒட்டியுள்ள பகுதிகளில் ஒரு மேம்பாலமோ அல்லது சாலையோ அமைத்துத் தந்து, கூட்ட நெரிசலைத் தடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளத்தி-அவலூர்பேட்டை மாவட்ட முக்கியச்*

சாலையில் கிலோ மீட்டர் 60 மேல்மலையனூரில் உள்ளது. மேல்மலையனூரிலிருந்து வளத்தி, தாதிகுளம், சிறுதலைப்பூண்டி, மேல்சிவலம்பாடி மற்றும் அவலூர்பேட்டை ஆகிய ஊர்களுக்குச் சாலைகள் செல்கின்றன. வளத்தி-அவலூர்பேட்டை சாலை 16.40 கிலோ மீட்டர் நீளமுள்ள மாவட்ட முக்கியச் சாலையாகும். தற்போது இரு வழிப் பாதையாக உள்ளது. மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களால், மாதம் இருமுறை பௌர்ணமி மற்றும் அமாவாசை தினங்கள் மற்றும் திருவிழாக் காலங்களில் போக்குவரத்து அதிகமாக இருக்கும் தருணங்களில், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஈயகுணத்திலிருந்து கொடுகன்குப்பம் வரை சுமார் 10.50 கிலோ மீட்டர் நீளம் மற்றும் 7 மீட்டர் அகலத்தில் சுற்று வட்டப் பாதை அமைக்க 30 எக்டர் நிலம் கையகப்படுத்த வேண்டியுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, வருங்காலங்களில் அரசின் நிதிநிலைக்கேற்ப, சுற்று வட்டச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே அங்கு பாதி சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது, வளத்தி சாலையிலிருந்து முருகன்தாங்கல் வரையிலான பாதி* circle *அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது கோரிக்கையை ஏற்று, கனிவோடு பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

முற்பகல் 10-20

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்புப்*

பகுதியில் பிரசித்தி பெற்ற அருள்மிகு சதுரகிரி சுந்தரமகாலிங்கம் திருக்கோயில் அமைந்திருக்கின்றது. இந்தத் திருக்கோயிலுக்கு ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான பக்தர்கள் தினந்தோறும் வந்து செல்கின்றார்கள். சமீபத்தில்கூட, இயற்கைச் சீற்றத்தால் மிகப் பெரிய அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டு, பல உயிரிழப்புகள் ஏற்பட்டன. அப்படி அதிக அளவில் பக்தர்கள் வருகின்ற அந்தக் கோயிலுக்குச் செல்கின்ற பாதை, ஒரு வழிச் சாலையாக இருக்கின்றது. எனவே, சதுரகிரி சுந்தரமகாலிங்கம் திருக்கோயிலுக்குச் சென்று வருகின்ற பக்தர்கள் சிரமமின்றி சென்றுவரும் வகையில், வத்திராயிருப்பை மையமாக வைத்து ஒரு புறவழிச் சாலை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தச் சாலையை ஆய்வு செய்து, அந்த ஆய்வில் அங்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு அதைக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்கு அடுத்த தொகுதிதான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய ஒரத்தநாடு தொகுதி. அந்தத் தொகுதியிலிருக்கும் வடசேரி வரையில் உள்ள அந்தப் பட்டுக்கோட்டை சாலை சமீபத்தில் சீரமைக்கப்பட்டுள்ளது. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை; மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு அருகிலே,

2015 செப்டம்பர் 14]

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அமர்ந்திருப்பதால்தான், அந்தத் தொகுதியில் மட்டும் அப்பணிகள் சீக்கிரமாக நடைபெற்று வருகின்றன என்று கருதுகிறேன். எங்கள் அமைச்சர் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்திருக்கிறார். அதனால்தான் என்னவோ, அந்தப் பக்கம் சாலை வருவதற்குக் கொஞ்சம் தாமதம் ஆகிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் இதுபோன்று பேசக்கூடாது. (குறுக்கீடு)*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *இது சாதாரணமான விஷயம்தான். (குறுக்கீடு) ஏனென்றால், உள்ளிக்கோட்டை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான ஒரு கருத்தினை இங்கே பதிய வைக்கக்கூடாது. 234 தொகுதிகளும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தொகுதிகள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், தமிழகம் முழுவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முதலமைச்சராக இருக்கின்றார்கள். இந்தத் தொகுதி, அந்தத் தொகுதி என்று வேறுபாட்டினை எங்கும் காட்டுவதில்லை. அனைத்துத் தொகுதிகளிலும் ஒரேமாதிரியாகத்தான் பணிகள் செய்யப்படுகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் கேட்டது போதும்; உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

வினா வரிசை எண் 244, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.